கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 1/2019

2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04-ஆம் நாள் செவ்வாய் கிழமை பிரதிவாதி **(பி.வா.சா.3)** தரப்பு சாட்சியின் சாட்சியம்.

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிகளின் படி வள்ளியூர் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.A.அன்னலெட்சுமி,M.L., அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | அகமது ஜலாலுதீன் | **சமயம்** | : | |
| **த/பெ** | : | அகமது அலி | **வயது** | : | 47 |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | | : | |

பி.வா.சா.3 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1) நீங்கள் இராதாபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் எப்போது இருந்து பணியில் உள்ளீர்கள் என்றால் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் பணியில் உள்ளேன். வழக்கில் வாதி மயில்ராஜன் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு 2019ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா வழக்கில் 4, 5 பிரதிவாதிகள் தனியாக எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையினை ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.04 17:15:12 +0530

2) வழக்கில் நீங்கள் சாட்சியம் சொல்வதற்கு முன்பாக இருக்கன்துறை ஊரில் ஆறுமுக நாடாரின் வாரிசுகள் யார் என்பது சம்பந்தமாக விசாரணை செய்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 வாரிசு சான்றிதழ் 27.08.2012 அன்று வழங்கப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக இறந்த ஆண்மகனின் வாரிசு சான்று கேட்டு விண்ணப்பிக்கும் போது இறந்தவரின் தாயாரை வாரிசாக குறிப்பிட்டு வாரிசு சான்றிதழ் வழங்கப்படுவது வழக்கம் என்றால் தற்போது இறந்தவரின் தாயார் உயிரோடு இருந்தால் அவரது பெயரையும் சேர்த்து வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது, 2012 ம் ஆண்டு அவ்வாறு இல்லை என்று சாட்சி கூறுகிறார். தற்போது தாயார் காலம் சென்றுவிட்டாலும், இறந்து விட்டார் என குறிப்பிட்டு வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான்.

3) வா.சா.ஆ. 4 ஆனது வாதி மயில்ராஜனின் வாக்காளர் அடையாள அட்டை என்றால் சரிதான். அதில் தந்தையின் பெயர் ஆறுமுகம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ. 4 01.01.1999 அன்று இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். உங்களுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டபடி வாதி கல்வி , படிப்பு சான்றிதழில் கூட தகப்பனார் பெயர் மாசாணம் என்று குறிப்பிட்டுள்ளது சம்பந்தமாக வாதியின் படிப்பு சம்பந்தப்பட்ட ஆவணங்களை பார்வையிட்டுள்ளீர்களா என்றால் பார்வையிட்டுள்ளேன்.

4) நீங்கள் பார்வையிட்டுள்ள ஆவணங்களின் நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. 01.11.2018 காலகட்டத்தில் இராதாபுரம் வட்டாட்சியராக யார் பணியாற்றி வந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அன்றைய தேதியில் வாதி வட்டாட்சியரிடம் ஏற்கனேவே வழங்கப்பட்ட

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.04 17:15:23 +0530

வா.சா.ஆ. 4 வாரிசு சான்றிதழ் செல்லாது என்றும், தன்னை ஆறுமுக நாடாரின் வாரிசாக குறிப்பிட்டு வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று கேட்ட விவரம் தெரியாது என்றால் சரிதான்.

5) நீங்கள் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு அன்றைய தேதியில் இருந்த வட்டாட்சியராக இருந்த வட்டாட்சியரிடம் இவ்வழக்கு சம்பந்தமாக கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். உங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளது போல் நீங்கள் வாதியின் கல்வி சான்றிதழ்கள் எதையும் பார்வையிடவில்லை என்றும், மேற்படியாரின் கல்வி சான்றிதழில் தந்தை பெயர் மாசாணம் என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அவருடைய கல்வி சான்றிதழில் மாசாணம் என்பவர் பாதுகாவராக குறிப்பிடப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

6) உங்களது வட்டாட்சியர் அலுவலத்தில் இருந்து இருக்கன் துரை கிராமம் எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் 9 கி.மீ தூரத்தில் உள்ளது என்று சாட்சி கூறுகிறார். நீங்கள் வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக இருக்கன்துரை கிராமத்திற்கு சென்று வாதியின் தகப்பனார் ஆறுமுகம் யார் என்பது குறித்து விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

7) ஆறுமுகம் என்பவரின் குமாரர் தான் வாதி என்றும், நீங்கள் முறையாக விசாரணை செய்யாமல் வழங்கியுள்ள வா.சா.ஆ. 2 வாரிசு சான்றிதழ் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அதனால் தான் உங்களது தரப்பில் எந்த விதமாக எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்படாமல், நீங்கள் செய்த தவறை மறைப்பதற்காக 1

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.04 17:15:29 +0530

முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையினை ஏற்றுக்கொண்டதாக குறிப்புரை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்களும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஆதராக சாட்சியம் அளிக்கிறீர்கள், உங்களது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நீங்கள் ஏற்கனவே வழங்கியுள்ள வா.சா.ஆ. 2 வாரிசு சான்றிதழை ரத்து செய்துவிட்டு, ஆறுமுக நாடாரின் வாரிசாக வாதியையும் 1 முதல் 3 பிரதிவாதிகளையும் குறிப்பிட்டு வாரிசு சான்றிதழ் வழங்க கடமைபட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்க கேட்டு சரியென்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.08.04 17:15:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.